# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.12**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜு | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 16.10.2025

முதல் விசாரணை

நான் தற்போது அலங்கியம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலர் ஆக பணிபுரிந்து கொண்டிருந்தபோது மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 287/2018 குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 174 வழக்கில் ஆய்வாளர் உத்தரவின் பேரில் பிரேத வழி காவலராக நான் நியமிக்கப்பட்டு கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு காவல் ஆய்வாளர் ராமு என்பவருடைய பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார். அதை பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவக் கல்லூரி அலுவலர் மருத்துவர் வசம் ஒப்படைத்தேன். சடலக்கூறாய்வு முடிந்த பிறகு மேற்படி பிரதேசத்தில் இருந்த கருப்பு நிற சிவப்பு பார்டர் போட்ட கிழந்த நிலையில் உள்ள முண்டாசு பனியன் ஒன்றை கைப்பற்றி காவல் ஆய்வாளரிடம் தனி அறிக்கையுடன் சமர்ப்பித்தேன். மேற்படி **முண்டா பனியன் சா.பொ.15.** அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட படிவம் 91 ல் கையெழுத்து என்னுடைய தான். நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்த **தனி அறிக்கை அ.சா.ஆ.11.** சடலக்கூறாய்வு முடிந்த பிறகு இறந்து போன ராமு என்பவரின் பிரேதத்தை

அவரது மனைவி கவிதா என்பவர் வசம் ஒப்படைத்தேன்மேற்படி சம்பவம் தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.16 19:23:59 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.13**

| | | | |
|---|---|---|---|
| Name | : வேலுச்சாமி | Caste | |
| Father's Name | : கருப்புசாமி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 16.10.2025

**முதல் விசாரணை**

1. நான் காட்டம்மன் புதூரில் குடி இருக்கிறேன். ஹாலோ பிளாக் கம்பெனியில் வேலை செய்கிறேன். நான் திருப்பூரில் இருந்து முத்து என்பவரது கம்பெனியிலிருந்து ஒரு மான்ஸா இண்டிகோ கார் பதிவு எண் TN 38 BD 5402 என்ற காரை ரூபாய் இரண்டரை லட்சதிற்கு வாங்கி வந்தேன். மேற்படி கார் பழனிசாமி என்பவர் பெயரில் பதிவாகி இருந்தது. மேற்படி காரை நான் தாராபுரம் பைனான்ஸ் நிறுவனத்தில் 2.50 இலட்சம் லோன் வாங்கி வாங்கினேன். லோன் முடிந்ததற்கு பிறகு பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம் என்று நினைத்து அதே பதிவு சான்றிதழ் உடன் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்தேன். என்னுடைய வீட்டில் வண்டியை நிப்பாட்டுவதற்கு இடம் இல்லாததால் நவீன்ராம் என்பவருடைய வீட்டில் மேற்படி வாகனத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு வாடகைக்கு ஓட்டு வந்தேன்.

2. 21.10.2018 ஆம் தேதி மேற்படி நவீன்ராம் என்பவர் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு அவருக்கு தெரிந்த ஹரிதாஸ் என்பவர் ஒரு பெண்ணுடன் மேற்படி வாகனத்தை வாடகைக்கு கேட்டு வந்ததாகவும் அவர்களுக்கு வாடகைக்கு கொடுக்கலாம் என்றும் என்னிடம் சொன்னார். 25.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் நிலையத்தில் இருந்து என்னை போன்

மூலம் தொடர்பு கொண்டு என்னுடைய கார் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பாக என்னை விசாரிக்க வேண்டும் என்றும் என்னை காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி சொன்னார்கள். காவல் நிலையத்திற்கு நான் சென்றபோது யார் மூலமாக மேற்படி வண்டியை வாடகைக்கு கொடுத்தேன் என்று என்னை விசாரித்தார்கள். நான் நவீன் என்பவர் தான் மேற்படி வண்டியை வாடகைக்கு கொடுத்து விட்டார் என்று சொன்னேன். வண்டியை யாரிடம் எப்போது வாடகைக்கு கொடுத்தேன் என்பது தொடர்பாக போலீசார் அழைக்கும் போது விசாரணைக்கு வர வேண்டும் என்று எனக்குச் சொன்னார்கள். 7.12.2018 ஆம் தேதி என்னை மீண்டும் போலீசார் போன் மூலம் தொடர்பு கொண்டு வரச் சொன்னார்கள். எனக்கு தெரிந்த உண்மைகள் அனைத்தையும் காவல் நிலையத்தில் நான் சொன்னேன். இது தொடர்பாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. போலீசார் என்னை விசாரித்த போது எத்தனாம் தேதி மேற்படி வாகனத்தை நான் விலைக்கு வாங்கினேன் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் விசாரணையின் போது பழனிசாமி மற்றும் முத்து ஆகியோரது முகவரியை நான் அவர்களிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது எந்த நிதி நிறுவனத்தில் மேற்படி காரை வாங்குவதற்கான கடனை வாங்கினேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி TN 38 BD 5402 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் எனக்கு சொந்தமானது என்பதை காட்ட எந்த விதமான ஆதாரமும் அல்லது ஆவணமோ என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான். அது தொடர்பாக நான் எந்த விதமான ஆதாரத்தையும் ஆவணத்தையும் போலீசாரிடம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எப்போதிலிருந்து மேற்படி வாகனத்தை நான் நவீன் என்பவர் வீட்டில் நிறுத்தி வைத்திருந்தேன் என்பதையும் போலீசார் விசாரணையில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. மேற்படி நவீன் என்பவருடைய வீடு தாராபுரத்தில் எந்த இடத்தில் உள்ளது என்றும் அவரது முகவரி என்ன என்பதை குறித்தும் போலீசாரிடம் நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் வாடகைக்காக அனுமதிக்கப்பட்ட வாகனம் அல்ல என்று சொன்னால் சரிதான். டீ போர்டுக்கான

உரிமம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வாகனத்தை நவீன் ராமின் வீட்டில் நிறுத்தி வைத்ததை காட்ட எந்த விதமான ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி நவீன் ராம் எந்தெந்த தேதியில் யார் யாருக்கு மேற்படி வாகனத்தை வாடகைக்கு அனுப்பினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் அது தொடர்பாக பதிவேடு எதுவும் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. மேற்படி காருக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றாலும் அது என்னுடைய கையிறுப்பில் இருந்ததற்கு எந்தவிதமான ஆதரவும் இல்லை என்று சொன்னால் சரி அல்ல. போலீசார் உடைய தயவு வேண்டும் என்பதற்காக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இங்கு நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி வாகனத்தை வாங்கி வரும்போது பெயர் மாற்றச் சான்றில் கையெழுத்து போட்டு கொடுத்திருந்தேன் அதை நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளேன். நவீன் ராம் யார் என்று எனக்கு தெரியாது என்றாலும் அவர் யாரிடமும் மேற்படி வாகனத்தை நான் குறிப்பிட்டது போல வாடகைக்கு கொடுக்கவில்லை என்றாலும் மேற்படி காருக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் எனவே தான் மேற்படி கார் தொடர்பாக எந்த ஆவணத்தையும் என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.16 19:24:06 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.